

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இளம்பிறை

இளம்பிறை கவிதை மனுசியாய் அறியப்படுகிறார். இவரது கவிதைகள் சில குடந்தை ஆடவர் கல்லூரியிலும், மதுரை தியகராயர் கல்லூரியிலும் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. திரைப்படத்துறையில் கிராமீய மணம் கமழும் பாடல் எழுத வந்திருக்கும் கிராமத்துக்குயில் இவர். வாழ்விலும் கிராமத்து கவிதைக்குயிலாகவே இருக்கிறார்.

தமிழ்நெஞ்சத்திற்காக: மஞ்சு ரெங்கநாதன்

'முதல் மனுசி' என்னும் தங்களின் நான்காவது கவிதைநூல் வெளியிட்டுள்ளீர்கள். முதல் கவிதை எழுதுவதற்கான உள்ளுணர்வை எப் போது பெற்றீர்கள் ?

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் பொழுது பாடத்தில் ஒரு வெளிநாட்டு பெண்மணியின் கவிதையைப் படிக்க நேர்ந்தது. பெண்களும் எழுதுவார்களா எனும் வியப்புணர்வு எழுந்தது. எழுதுவது கவிதைதான் என அறியாமலேயே எழுத ஆரம்பித்தேன். முதலில் எழுதும்பொழுது பாடல் நடையில்தான் எழுதினேன். கிராமத் தில் வேலைக்கு, தாலாட்டிற்கு, ஒப்பாரி என்று எல்லாமே பாடலுடன் இணைந்ததான வாழ்விருக்கும். ஆகவே அந்த தாக்கத்தில் ஆரம்ப காலத்தில் எழுதினாலும் பிறகு கவிதை நடையிலேயே எழுத ஆரம்பித்துவிட்டேன்.

நாம் எழுதுவது கவிதைதான் என எப்பொழுது உணர்ந்தீர்கள் ?

அப்போதெல்லாம் பேச்சுப்போட்டி, பட்டிமன்ற பேச்சில் கலந்து கொள்வேன். அப்படி ஒருமுறை திருக்குவளையில் 'முத்தமிழ்மன்றம்' நடத்திய கவியரங்கத்தில் கவிதை வாசிக்க நேர்ந்தது. 'நெஞ்சில் விதைப்போம் ஒற்றுமையை' என்னும் கவிதை வாசித்தேன். அனைவரும் பாராட்டினர். கவியரங்கில் கலந்து கொள்ள திருச்சி, தஞ்சாவூர் என பல ஊர்களிலிருந்தும் வந்திருந்த நண்பர்கள் சிற்றிதழ்களிலும் எழுது மாறு கூறினர். சிற்றிதழ்களுக்கு எழுத ஆரம்பித்தேன். தன்னம்பிக்கையுடன் கவிதை எழுதுகிறோம் என்னும் உவகையுடன் தொடர்ந்து எழுதி வருகிறேன்.

இது வரையிலும் வெளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்த உங்கள் படைப்புகள் ?

1988-ல் முதல் புத்தகம் 'இள வேனில் பாடல்' வெளிவந்தது. 1993ல் இரண்டாவது புத்தகம் 'மௌனக்கூடு' வெளியிடப்பட்டது. இரு புத்தகத்தில் வெளிவந்த கவிதைகளையும், இன் னும் சில புதிய கவிதைகளையும் இணைத்து மூன்றாவதாக 'நிசப்தம்' நூல் வெளிவந்ததும் பலராலும் சிறப்பாகப் பேசப்பட்டது. இப்போது 2003-ல் 'முதல் மனுசி' நூல் வெளிவந்திருக்கிறது.



சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வம் உள்ளதா?

அத்தனை பொறுமை கிடை யாது. மேலும் அரங்குகளில் ஒரு சிறுகதை வாசிக்கிறேன் என்று சொல்ல முடியாது. அதுவே கவிதை என்றால் சகித்துக்கொள்வார்கள். கவிதை எழுது வது சுலபம். அதனால் கவிதை மட்டும் எழுதுவேன்.

கவிதை எப்படி இருக்க வேண்டும்? தங்கள் கருத்து.

கவித்துவமாய் இருக்க வேண் டும் கவிதை. சுலபமாய், உண்மையாய் இருக்கணும்.

கவிதைக்கு பொய்யழகு என் பார்களே ?

உவமானம் தாங்க பொய்யாக இருக்கணும். கவிதைக்கு மெய்தாங்க அழகு. அனுபவம், அவஸ்தைன்னு உள்ளத்திலிருந்து வரும் பலதரப்பட்ட உணர்வுகளோடு ஒத்துவரும் உண்மையின் அழகுதான் கவிதை.

பிடித்த கவிதைகள் குறித்து சொல்லுங்களேன்?

தன்னம்பிக்கை கவிதைகள், அழ கியல் கவிதைகள் எல்லாமே பிடிக்கும். இரண்டு கவிதைகள் சொல்கிறேன்.

"வெறும் கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்"

ஆசிரியர் பெயர் நினைவில்லை. இந்த கவிதை மிகவும் பிடிக்கும்.

மு.மேத்தா அவர்களின் "பன்னீர் பூக்கள்" பிடிக்கும். அதில் ஒரு கவிதை

"வரம் கொடுக்கும் தேவதைகள்
வந்தபோது தூங்கினேன்
வந்தபோது தூங்கிவிட்டு
வாழ்க்கையெல்லாம் ஏங்கினேன்" .

அருமையான ஒரு கவிதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதை தவிர உங்களுக்கு ஆர்வமான விஷயங்கள் ?

திரைப்படம் பிடிக்கும். கிராமத்தில இருக்கிறப்போ பக்கத்தில திரையரங்கு இருக்கும். நேராகப் போகாம குறுக்குவழியா படம் பார்க்கப்போவோம். வந்ததும் பிடித்தமான பாடலின் மெட்டுக்கு வேற பாடல் எழுதுவேன்.

அப்படி அப்போது எழுதிய பாடல்கள் கைவசம் இருக்கின்றதா?

மனசுலதாங்க இருக்கு.

இப்போது அதுபோல் எழுதுவீர்களா?

பள்ளியில் விழாக்களுக்கு திரைப்படபாடல் மெட்டில் தேசபக்திப்பாடல்கள் எழுதித்தருவேன். குழந்தைகள் விரும்பி குதூகலமாகப் பாடுவாங்க. அவங்க பாடுறத கேட்டு மற்ற பள்ளி மாணவர்களும் பயிற்சி பண்ணி பாடுவாங்க. இப்ப எங்க பள்ளி மாணவர்கள் "என்னைத்தாலாட்ட வருவாளா" பாடல் பாடமாட்டாங்க. 'இன்று ஆகஸ்டு பதினைந்து'ன்னு நான் எழுதிய பாடல் தான் பாடுவாங்க. 'காதல் வெண்ணிலா' பாடலுக்கு 'நாட்டிற்காக நாம் நாளும் வாழுவோம் என்று உறுதி கொள்வோம் இதை என்றும் மனதில் கொள் வோம்'ன்னு பாடுவாங்க.

இப்ப 'தத்தித் தாவுது மனசு' படத்தில் தேவா சார் இசையமைப்பில் சுஜாதா பாடியிருக்காங்க. அதுதான் என்னோட முதல் திரைப்படபாடலும் கூட.



திரைப்படத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?

சென்னைக்கு விரும்பி வந்ததே இலக்கிய கூட்டத்தில் கலந்து கொள்ளவும். இலக்கிய நண்பர்களை சந்திக்கவும், திரைப் படத்திற்கு பாடலெழுதவும்தான். தத்தித்தாவுதுமனசு படத்தின் தயாரிப் பாளர்களில் ஒருவர் நண்பர் ஜெ.பிஸ்னி. திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்தவர். அவர் படம் எடுக்கும் போது அழைத்ததும் எழுத ஆரம்பித்துவிட்டேன். இளம் புது இயக்குனர்களும், இயக்குனர் லிங்குசாமியும் வேறு படங்களில் வாய்ப்பு அளிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

மெட்டிற்கு பாடல் எழுதுவீர்களா? பாடலுக்கு மெட்டு விரும்புவீர்களா?

கவிஞர்கள் பொதுவா பாடலுக்கு மெட்டுதான் விரும்புவாங்க.



ழுத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நானும்தான். பல தன்னுணர்வு பாடல்கள் எழுதி வைத்திருக்கிறேன். மெட்டு கொடுத்தாலும், கொடுக்கும் சூழ் நிலைக்கு தகுந்தவாறும் பாடல் உடனே எழுதிவிடுவேன்.

திரைப்படபாடலில் பிடித்த பாடல் ?

மார்கழிப்பூவே மார்கழிப் பூவே, முதல் முதலில் பார்த்தே காதல் வந்ததே.

பிடித்த திரைப்படம்?

மகேந்திரனின் உதிரிப் பூக் கள்.

இசையில் பிடித்தது?

எனக்கு மென்மையான பாடல்கள் எல்லாமே பிடிக்கும். நான் இசையின் ரசிகை. கரடு முரடா இல்லாம மென்மையான எல்லா பாடல்களும் பிடிக்கும். கஜல், இந்திப்பாடல்கள் என இசை மிகவும் பிடித்தமானது.

வேறு துறைகளில் ஆர்வம்?

விளையாட்டில் கிரிக்கெட். சச்சினின் தீவிரமான ரசிகை நான். போட்டி நாட்களில் பார்ப்பதற்காக விடுமுறை கூட சில சமயங்களில் எடுத்துக்கொள்வேன்.

தையல், கோலம், ஓவியம் போன்றவைகளில் விருப்பம்?

முன்பு செய்வேன். இப்போது படிக்கவும் எழுதவுமே நேரம் ஒதுக்கிக் கொள்ளவேண்டிய கட்டாயம் இருப்ப தால், சோம்பலுடன் அதன் அருகே செல்வதில்லை. உள்ள நேரத்தில் வீட்டை, குழந்தைகளை சரிசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம்.

இந்தியா விடுத்து வேறு எந்த தேசம் போகவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

ரஷ்யா. அதன் பனி படர்ந்த பிரதேசங்கள் பார்க்க விருப்பம்.

அமெரிக்காவிலிருந்து அண் டார்டிகாவரையிலும் எத்தனையோ பனிப்பிரதேசங்கள் இருக்க ரஷ்யா ஏன்?

## தேன் துளிகள் ...

ஒரு எழுத்தாளன் தனது படைப்புகளைப்பற்றி பெருமையாகப் பேசுவது, ஒரு தாய் தனது குழந்தைகளைப்பற்றி பெருமையாகப் பேசுவதைப்போல மோசமானது.

பெஞ்சமின் டிஸ்ரேலி

நாம் துன்பமாய் இருக்கும்பொழுது, மகிழ்ச்சியாக இருந்த நாட்களை நினைத்துப் பார்ப்பதைவிட துயரம் எதுவுமில்லை

டான்டே அலிகிரி

இவ்வளவு மகிழ்ச்சிப்பெருக்கோடு மக்கள் என்னை வரவேற்பதைப் பார்த்து மகிழாதீர்கள். என்னை தூக்கில் போட்டால்கூட மக்கள் இதே அளவு மகிழ்ச்சியோடு அதையும் வரவேற்பார்கள்.

ஆலிவர் கிராம்வெல்

வறுமை குற்றங்களின் தாய் என்றால், முட்டாள்தனம் அவைகளின் தந்தை.

லாப் ருயேர்

சட்டங்கள் சிலந்தி வலையைப் போன்றது. சிறிய பூச்சிகள் அதில் மாட்டிக் கொள்கின்றன. பெரியவைகள் வலையை அறுத்துவிட்டு தப்பிவிடுகின்றன.

பிரான்சிஸ் பேகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்ய தேசத்து பிடித்த இலக்கியம் படித்ததால். லியோடால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு, சிங்கிஸ் ஐட் மாத்யுவின் முதல் ஆசிரியர் படித்ததும் மனசுக்கு நெருக்கமானதாயும், நம் உணர்வுகளோடு ஒத்துப்போவதாயும் இருப்பதால் ரஷ்யா செல்ல விருப்பம்.

கம்யூனிஸம்?

இல்லைங்க. கம்யூனிஸ நண்பர்கள் இருக்கிறாங்க. ஆன எனக்கு கம்யூனிசம் தெரியாது.

நட்பு குறித்த தற்போதைய சூழல் குறித்து?

நட்பு மனசுக்கு ஆறுதல் அளிப்பதாய் இருக்கணும். நம்பிக்கை துரோகத்தில் முடியக்கூடாது.

ஆண், பெண் நட்பு குறித்து?

ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் முளை விட்டு, துளிர் விட்டு வளர்த்தெடுக்கணும். எதிலும் குறைபாடு, தவறு இருக்கும். பெரிதுபடுத்தக்கூடாது. சமூகமும் அங்கீகரிக்கணும். இந்தக் காலத்தின் தேவையானதும்கூட.

அடுத்த நூல்?

கவிதை நூல் வர இன்னும் பல வருடங்கள் ஆகலாம். ஒரு நாவல் எழுத ஆரம்பித்து ஒரு வருடத்தில் ஒரு அத்தியாயம் தான் எழுதியுள்ளேன்.

சிறுகதை எழுத இயலாது சோம்பல் என்றீர்கள். நாவல் எழுவதாய் சொல்கிறீர்கள்?

ஆமாம். ஆனாலும் பெண்களின் பிரச்சினை குறித்த நாவல் இது. பதிவு செய்யவேண்டும் என்ற ஆற்றாமை, கட்டாயத்தின் காரணமாய் எழுதியே தீரவேண்டுமென்று எழுதிவருகிறேன்.

தங்கள் கவிதையின் மீதான பாராட்டுக்கள், விமர்சனங்கள் குறித்து?

சமீபமாய் வந்த ஆனந்தவிகடன் உட்பட பல இதழ்களில் எழுத்தாளர் சுஜாதா பலவகைகளில் தனது பாராட்டை தொடர்ந்து தெரிவித்து வருவது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. 'முதல்மனுசி' புத்தக வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்த எழுத்தாளர் மாலன் அவர்கள் சன் தொலைக்காட்சியில் 'இலக்கிய சங்கமம்' நிகழ்ச்சியில் நேர்காணல் செய்து சிறப்பித்தார். அதனைக் கண்ட எழுத்தாளர் வாஸந்தி அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸின் சண்டே எக்ஸ்பிரஸ்ஸில் வெகுவாகப்பாராட்டி எழுதியுள்ளார். கம்யூனிஸ நண்பர்கள் கிராமத்துக் கவிதைகளைச் சிறந்ததாகப் பாராட்டிச் சொல்வார்கள். புத்தகம் மீதான ஒரு விமர்சனக்கூட்டத்தில் டேவிட் ஜான் பிரிட்டோ என்பவர் இளம்பிறை கவிதையே எழுதவில்லை என்றார். காலச்சுவடு பத்திரிக்கையில் நூல் அறிமுகத்தில் அய்யனார் என்பவர் தன்மனம் போன போக்கில் விமர்சனம் செய்திருந்தார்.

முதல்மனுசி நூலில் அதிகமாக ரசிக்கப்பட்ட கவிதை?

அப்பாவின் கையெழுத்து தான். எல்லோரும் அதைக்குறிப்பிட்டுச் சொல்வாங்க.

முன்பு இருந்த உங்கள் கிராமத்தின் இன்றைய நிலை குறித்த உங்கள் கருத்து?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கு கிராமம் தான் பிடிக்கும். வாய்ப்புக்களைத் தேடித்தான் நகரம் வந்திருக்கிறேன். இப்பவும் கிராமம் பழையபடிதான் இருக்கிறது. எல்லா அறிவியல் முன்னேற்றம் இருந்தாலும் மனிதர்களின் மன நிலை ஒரேமாதிரிதான் இருக்கிறது. ஜாதிவேற்றுமை பிடிக்காதவங்க நகரம் விரும்புறாங்க. பழம் பெருமை பேசுறவங்களும், நிலபுலன்களை கவனிக்க வேண்டியவங்களும் அங் கேயே இருக்க விரும்புறாங்க.

சுதந்திரம் என்று எதனை நினைக்கிறீர்கள்?

நம்பிக்கையில்லாமல் இருப் பது சுதந்திரம்.

அதெப்படிங்க?

நம்பிக்கைகள் தோற்று பொய்த்துப் போகும்போது நம்பிக் கையே இல்லாமல் இருப்பது தானே சுதந்திரம்.

நீங்கள் பெற்ற விருதுகள்?

'மௌனக்கூடு' நூலுக்காக களம் இலக்கிய விருது (களம் இலக்கிய அமைப்பு), 'நிசப்தம்' நூலுக்காக திருப்பூர் தமிழ்ச் சங்க விருது (திருப்பூர்தமிழ் சங்கம்), யாளி அறக்கட்டளை விருது (கவிஞர் இந்திரன்), கவிஞர்கள் தினவிருது (கவிஞர் வைரமுத்து) பெற்றுள் ளேன். எல்லாவற்றுக்கும் மேலாக என் னைச் சந்திக்கும் பொழுதில் அதிகம் படிக்காதவர்கள் கூட கவிதை எளிதாய் புரியுது என்று சொல்லுவதையும் எனக்கு கிடைத்த சிறந்தவிருதாய் கருதுகிறேன்.

♦



# நமது நாட்டில் செய்யப்பட்டது!

ஒரு முறை சோவியத் நாட்டில் இருந்து சோவியத் திரைப்படக் கலைஞர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தார்கள். அவர் களுக்கு தமிழ்நாட்டுத் திரைப்பட ஸ்டுடியோக்களைச் சுற்றிக் காண்பிக்கும் பொறுப்பு கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கலைவாணர் சோவியத் கலைஞர் களுக்கு ஸ்டுடியோக்களிலிருந்த படத் தயாரிப்புக்கான சாதனங்களையெல்லாம் காண்பித்துக்கொண்டு வந்தார். சோவியத் கலைஞர்கள் அங்கிருந்த தொழில் நுட்பப் பொருட்களையெல்லாம் பார்த்து இவையெல்லாம் எங்கு செய்யப்பட்டவை என்று கேட்டார்கள்.

அதற்கு கலைவாணர் "இது இங்கிலாந்தில் செய்தது. அது ஜப்பானில் இருந்து வந்தது. இது அமெரிக்கத் தயாரிப்பு" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஒரு சோவியத் கலைஞர் "உங்கள் நாட்டில் தயாரான சொந்தத் தயாரிப்புக்கள் ஒன்றும் இல்லையா?"என்று கேட்டார்.

அந்தக் கேள்வி கலைவாணருக்கு வெட்கத்தையும், வேதனையையும் தந்தாலும் அவர் சிரித்துக்கொண்டே சோவியத் கலைஞர்களை நோக்கி "ஏன் இல்லை இந்த ஸ்டுடியோவில் உள்ள சுவர்களையெல்லாம் நாங்கள்தான் கட்டினோம். இங்கே இருக்கும் மரங்களையெல்லாம் நாங்கள்தான் வளர்த்தோம். அதோ அங்கு நிற்கும் காரின் நான்கு டயர்களுக்கும் நாங்கள்தான் காற்றடைத்தோம்" என்றார் நகைச்சுவையாக.

(மேதாவிகளின் நகைச்சுவைகள் என்னும் நூலிலிருந்து)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோடைக்கால விடுமுறையும் தாய்மண் நினைப்பும்!

## வேலணையூர் பொன்னண்ணா

கோடை விடுமுறை வந்தாச்சு
ஆடை அனைத்தும் குறைந்தாச்சு
கோயிலிலும் கொடி ஏறியாச்சு
கூறையும் வெளியே வந்தாச்சு!

பனிக்குத்தில் பட்ட வேதனையில்
பளிச்சென்று இருந்த முகமெல்லாம்
வெய்யில் காய்ந்து கறுத்தாச்சு
தாய்மண் நினைப்பும் வந்தாச்சு!

புலம்பெயர் மக்கள் நெஞ்சத்தில்
புதைந்து கிடக்கும் நினைப்பாச்சு
சமாதானப் பேச்சும் வழியாச்சு
பயண முகவரின் துணையாச்சு!

ஒரே கப்பலில் முன்னூறு
ஒரே நாளில் போயாச்சு
வங்கிக் கணக்கு எல்லாமே
வந்து கதைக்கும் நினைப்பாச்சு!

இயற்கை அன்னைத் தோட்டத்தில்
இயல்பாய் பூத்தப் பூவெல்லாம்
சுயமாய் சுதந்திரப் பாட்டிசைத்து
நர்த்தனம் ஆடும் கலைகண்டேன்
சிரித்து மகிழ்ந்து சுகம்கண்டேன்
மண்ணின் நினைப்பில் நான்நின்றேன்!

சொந்தம் சொல்லி உறவுகளும்
சுற்றி வந்து நின்றாச்சு
உறவுகளுக் கொடை, உடையென்று
மாற்றிய பணமும் கரைஞ்சாச்சு
கோயில் காறர் ஒருபக்கம்
கோபுரக் காறர் மறுபக்கம்
கத்திக் கத்தி கொடுத்தாச்சு
சுத்தமாய்க் கை வெளிச்சாச்சு!

வந்து சேர பணத்துக்கு
விஸாகார்டின் நினைப்பும் வந்தாச்சு
கொழும்பை நோக்கி விரைந்தாச்சு
வங்கி நோக்கிச் சென்றாச்சு
டிக்கெட் எடுத்து பார்த்தாச்சு
திரும்பிட முடிவும் எடுத்தாச்சு!

---

## சிரிப்பு



அவள் நெருப்புமாதிரி!
அவளா? அவள் விபச்சாரியாச்சே?
ஆமாம் அவள் தன்னை எரித்து
அடுத்தவர்களுக்கு வெளிச்சத்தைக்
கொடுப்பவள்.

### தொலைபேசியில்....

ஹலோ...கொஞ்சம் சத்தமாகப்
பேசுங்க (தனக்குள்ளாக) சரியான
செவிடனாக இருப்பான் போலிருக்கே!

ஹலோ கொஞ்சம் மரியாதையாகப்
பேசுங்க.

........!?!?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முற்றத்தில் ஒரு முருங்கைமரம்

வண்ணை தெய்வம்

"என்னங்க புது விட்டிற்குப் போகும்போது எப்படியும் இதையும் எடுத்துக்கொண்டு போயிடுவோமுங்க இதை விட்டிட்டுப்போக எனக்கு மனசே வருகுதில்லைங்க" என்று சொல்லும்போது அன்னத்தின் கண்கள் கலங்கிநின்றன.

"என்னடி விளையாடுறியா? ஆடா, மாடா, நாயா, பூனையா, நடத்திக் கூட்டிக்கொண்டு போறதுக்கு? கோழியா, குஞ்சா, தூக்கிக்கொண்டு போறதுக்கு? கடையிலை விக்கிற உப்பா, புளியா, காசு குடுத்து வாங்கிக்கொண்டு போறதுக்கு? ஒரு வருசம் இரண்டு வருசமில்லை ஒன்பது வருசமா வளர்த்த மரம்! முருங்கை மரம்! எப்படியடி கொண்டுபோகலாம்? அன்னம் நல்லா யோசிச்சுப்பார் நாளைக்குள்ளை வீட்டை தங்களிட்டை தந்திடவேணும் எண்டு போன கிழமை வீட்டுக்காறர் சொல்லிப்போட்டு போனதை மறந்திட்டியா? அதுவும் சும்மா சொல்லேல்லை கையிலை பத்தாயிரம்ருபா காசையும் தந்திட்டு உன்ரை காணிக்குள்ளை ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு ஒரு கிழமைக்குள்ளை எங்கடை வீட்டை விட்டு போயிடுங்கோ எண்டு சொல்லீட்டினம். ஏதோ வசதிக்குத் தக்கமாதிரி ஒரு மண், விடு கட்டிப்போட்டம் இருக்கிற சாமான்களை மூட்டை முடிச்சாக் கட்டிக்கொண்டு போற வழியைப் பாக்கிறதை விட்டிட்டு முருங்கை மரத்தை கொண்டுபோற கதை கதைக்கிறாய்." அன்னத்தின் குழந்தைத்தனமான பேச்சைக் கேட்டு என்ன பேசுவது என்று தெரியாமல் பட படவென கொட்டித் தீர்த்தான் கதிரேசன்.

அன்னம் வீட்டின் முற்றத்தில் பூவும் பிஞ்சுமாக செழித்து நின்ற அந்த முருங்கை மரத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள். அந்த முருங்கை மரத்தின்மீது அன்னம் வைத்திருந்த பாசத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை.

பத்து வருடங்களுக்கு முன்னர் கதிரேசன் அன்னத்தை கல்யாணம் செய்தபோது அன்னத்தின் பெற்றோர்கள் சீதனமாக ஒருபரப்புக் காணியைக் கொடுத்தார்கள். கற், பாறைகளும், முள்ளும் புதருமாக இருந்த அந்தக் காணியை கதிரேசன் தன்னால் முடிந்தவரை சீர்படுத்தி ஒரு ஓலைக்குடிசையைப் போட்டுக்கொண்டு தங்களது வாழ்க்கையை அங்கு ஆரம்பித்தார்கள்.

கதிரேசன் மேசன் வேலை செய்யும் ஒரு தினக்கூலி. காலை போனால் மாலைதான் வீடு திரும்புவான். அன்னம் வீட்டுவேலைகள் முடிந்ததும் சும்மாயிருப்பதில்லை. வீட்டுக் காணியை துப்பரவு படுத்துவது வேலிக் கதியால்களுக்கு தண்ணி ஊத்துவது இப்படி ஏதாவது செய்தபடிதான் இருப்பாள்.

காணிக்குள் ஏதாவது பிரயோசனமான மரம் செடிகளை வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட அன்னத்திற்கு 'கல்லுக் காணிக்குள் கறிமுருங்கைதான் செழித்து வளருமென' விசயம் தெரிந்தவர்கள் விபரம்கூற வீட்டைச்சுற்றி இரண்டு மூன்று முருக்கங் கிளைகளை நட்டு பிள்ளை வளர்ப்பது போல வளர்த்தாள் அன்னம்.

ஒரு வருடம் சென்றுவிட்டது அன்னத்தின் தோளில் ஒருமாதக் குழந்தை. அவள் தடியாக நட்ட முருங்கைகள் இப்பொழுது நன்றாக செழித்து மரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடிக்கணக்கான
இதயங்களை
நெகிழ வைத்த
மாபெரும் இசைக்
கலைஞனுக்கு எங்கள்
அஞ்சலிகள்

## அளவையூர்
## ஸ்ரீ கலாசூரி
## என். கே. பத்மநாதன்.



ஆரம்ப காலத்தில் (இலங்கை) கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் பின்னர் நல்லூர் கந்தசாமி கோவில் ஆகிய ஆலயங்களில் ஆஸ்த்தான இசைக்கலைஞராக இருந்து. உலகத் தமிழர்கள் மனங்களில் எல்லாம் இடம் பிடித்த நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதன் அவர்கள் கடந்த 14-07-2003ல் இறையடி சேர்ந்தார்.

இந்த இசை மேதைக்கு
தமிழ்நெஞ்சங்களின் சார்பில்
அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

மாறியிருந்தன.

அந்த முரங்கை மரங்கள் இலை தெரியாமல் பூத்து நின்ற காட்சியைப் பார்த்தபோது தானே உண்டாகியிருப்பது போன்ற ஆனந்தம் அவளுக்கு. ஆரம்பத்தில் குட்டிப்பாம்புகளைப்போல இருந்த முருங்கைக்காய்கள் ஒரு மாதம் செல்ல மொழி மொழியாக சதை வைத்து நீண்டு குலை குலையாக தொங்கி நின்றபோது அன்னத்தின் பெருமைக்கு அளவே இல்லை. அந்தச் சுற்றுவட்டாரத்தில் எந்த வீட்டிலும் அப்படிக் காய்த்த முருங்கைமரங்கள் இல்லையென்றே சொல்லலாம். அந்த அளவுக்கு காய்கள்.

இந்த நேரத்தில்த்தான் யாழ்ப்பாணத்தில் இருந்து எல்லா மக்களும் ஒரே நாளில் இடம்பெயரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கதிரேசன் கையில் அகப்பட்ட சில மாற்றுத்துணிகளையும் இரண்டொரு சமையற் பாத்திரங்களையும் அவசரம் அவசரமாக எடுத்துக்கொண்டு புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தான். அன்னமோ அந்த முருங்கை மரங்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த முருங்கை மரங்களெல்லாம் தன்னுடைய பிள்ளைகளாகவே அவளுக்குத் தோன்றியது. அவைகளைப் பிரிய மனமில்லாமல் கண்ணீர் வடித்தபடிதான் அன்று வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

இடம்பெயர்ந்த ஆறுமாதகால வாழ்க்கையில் கதிரேசனும் அன்னமும் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துவிட்டார்கள். நல்ல வசதியாக வாழ்ந்தவர்களே கையில் பணத்தை வைத்திருந்தும் உணவிற்கும் இருப்பிடத்திற்கும் கஷ்டப்பட்டபோது அன்றைய உழைப்பில் அன்றைய வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த கதிரேசன் போன்ற குடும்பங்களின் நிலமையை சொல்லவும் வேண்டுமா?

அகதிமுகாம் வாழ்க்கை! ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேர சாப்பாட்டிற்கே தினமும் வரிசையில் காத்திருக்கவேண்டிய பரிதாபகரமான சூழ்நிலை! இப்படியெல்லாம் வாழவேண்டுமா? என்று கதிரேசன் போன்ற ஏராளமான குடும்பங்கள் விரக்தியின் எல்லைக்கே வந்திருந்தன. இப்படியான நேரங்களில் அன்னம் தன் வீட்டு முருங்கை மரங்களை நினைத்துக்கொள்வாள். சமையலுக்கு எந்தவிதமான பொருளும் இல்லாத போதிலும் ஒரு சுண்டு அரிசியுடன் முருங்கை இலையை உருவிப்போட்டு காய்ச்சிக் குடிச்சே தாம் சந்தோசமாக வாழ்ந்த வாழ்க்கையை அன்னத்தால் மறக்க முடியவில்லை.

அகதி வாழ்க்கையை ஆறு மாத காலத்திற்குமேல் தாக்குப் பிடிக்கமுடியாத பல குடும்பங்களோடு கதிரேசன், அன்னம் குடும்பமும் இணைந்துகொண்டார்கள். யாழ்ப்பாணம் போனால் ஏதாவது வேலைசெய்து வாழ்க்கையை ஓட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு கொஞ்சம் கொஞ்சமாக யாழ்ப்பாணம் திரும்பிய மக்களில் முதல் பகுதியினரோடு கதிரேசன் குடும்பமும் இணைந்து கொண்டது.

யாழ்ப்பாணம் திரும்புவதும் அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை! இராணுவத்தின் எத்தனையோ தடை, முகாம்களையெல்லாம் தாண்டித்தான் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்களின் வீட்டை அடையவேண்டிய நிலை அவர்களுக்கு!

அப்படியெல்லாம் பல தடைகளை தாண்டி தங்களது வீட்டை நோக்கி வந்த கதிரேசன் தம்பதிகளுக்கு அங்கு பேரிடி காத்திருந்தது! அவர்களுக்கென்று ஒரு காணி இருந்ததற்கான அடையாளமே அங்கு இருக்கவில்லை!

யாழ்ப்பாணத்தை பிடிக்கவந்த இராணுவத்தினர் நேரடியாக வீதி வழியாக வந்து யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்துவிடவில்லை! மக்கள் குடி

## வாழ்க்கை!

கலைகளில்
தெரியும்
வாழ்க்கை
என்றார்

எங்கள் கலைகளில்
எங்கள் வாழ்க்கை
தெரியும்
தலையாட்டிப்
பொம்மைகளிலும்!

## முரண்

இறைவனின் வாகனம்
என்றான்
நாயை!

அவதாரம் என்றான்
பன்றியை!

இறைவனே என்றான்
குரங்கை!

இவனே திட்டினான்
என்னை
நாயே! பன்றியே!
குரங்கே என்று

கவிஞர் காசி ஆனந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிருப்புப் பகுதிகள் ஊடாக நுழைந்து அங்கிருந்த வீடுகளை எல்லாம் புல்டோசர் மூலமாக இடித்து தரைமட்டமாக்கி புதிய பாதை அமைத்து அந்த வழி மூலமாகவே யாழ்ப்பாணத்தை கைப்பற்றினார்கள். அந்த நேரத்தில் இடிக்கப்பட்ட ஏராளமான வீடுகளில் கதிரேசனின் வீடும் அடக்கம். வீடு மட்டுமா அங்கு இடிக்கப்பட்டிருந்தது அன்னம் பிள்ளையைபபோல வளர்த்திருந்த முருங்கைமரமும் இடம் தெரியாமல் போயிருந்தது.

குந்தி இருக்க ஒரு வீடு இல்லையே என்று குழப்பத்துடன் நின்றான் கதிரேசன். தான் ஆசையாக வளர்த்த முருங்கை மரங்களைக் காணவில்லையே என்று ஏக்கத்துடன் நின்றாள் அன்னம்.

சொந்த நாட்டிலேயே அகதி யாக்கப் பட்டு அந்த வாழ்க்கை வேண்டாமென திரும்பியவர்கள் பலர் இப்பொழுது சொந்த ஊரிலேயே நிர்க்கதி யற்று அகதிகளாக நிற்கின்றார்கள்! அந்த நேரத்தில் அவர்களுக்கு தோன்றிய ஒரே வழி இடம் பெயர்ந்து! புலம் பெயர்ந்து! வீட்டைவிட்டு போனவர்களின் வீடுகளில் தஞ்சமடைவதுதான்!

அப்படியான ஒரு வீட்டில்தான் கதிரேசனும் அன்னமும் குடி புகுந்துகொண்டார்கள். அந்த வீட்டில் நடுத்தர வயதுடைய ஒரு தம்பதிகளும் வயதுக்கு வந்த அவர்களின் மகளும்தான் வாழ்ந்து வந்தார்கள் அவர்களின் இரு ஆண்பிள்ளைகள் கனடாவிலும் பிரான்சிலும் வாழ்கின்றார்கள். இடப்பெயர்வோடு வன்னிக்குச் சென்ற அவர்கள் அப்படியே கொழும்பு சென்றுவிட்டார்கள் வெளிநாட்டில் வாழும் பிள்ளைகளின் ஆலோசனைப்படி கொழும்பிலேயே நிரந்தரமாக தங்கிவிட்டார்கள். ஆதலால் அந்த வீட்டில் குடிபுகுந்துவிட்டார்கள் கதிரேசனும் அன்னம்மாவும்.

பாவனையில் இல்லாது பாழடைந்த மண்டபம் போல் இருந்த அந்த வீட்டையும் காணியையும் துப்பரவு செய்து ஒரு நிலைக்குக் கொண்டு வந்தாலும் அன்னத்திற்கு ஏதோ குறை இருப்பதாகவே தோன்றியது.

அந்த நேரத்தில் பக்கத்து வீட்டுக்காறர் தங்கள் வளைவில் நின்ற முருங்கை மரத்தில் இருந்து இவர்கள் குடியிருக்கும் வளைவிற்குள் வந்திருந்த கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தார். இவ்வளவுகாலமும் இந்த வீட்டில் யாரும் இல்லாததால் இந்த வளைவிற்குள் வந்த கொப்பில் காய்த்த முருங்கைக் காய்களைப்பற்றிய கவலை அவர்களுக்கு இருக்கவில்லை இப்பொழுது தாங்கள் வந்ததனால் அந்தக் காய்களுக்கு பாதுகாப்பில்லை என்று நினைத்தார்களோ என்னவோ! அதுதான் வெட்டுகின்றார்கள் போலும்!

அதைப்பார்த்துக்கொண்டிருந்த அன்னம் "என்னங்க அவர்களிடம் கேட்டு ஒரு தடி வாங்குங்க நாங்கள் முத்தத்திலை நட்டு வளர்ப்பம்" என்றாள். காயும் காய்க்கும் நிழலாகவும் இருக்கும் என்றாள்.

"இஞ்சை அன்னம் நாங்கள் இருக்கிறது ஆற்றையோ வீடு நாளைக்கு வீட்டுக்காறர் வந்து போகச்சொன்னா போக வேண்டிய நாங்கள். நீ முருங்கையை வளர்த்துவிட ஆரோ வந்து காய் புடுங்கிச் சமைக்கப் போறாங்கள். பேசாமல் வேறை வேலையளைப்பார்" என்றான் கதிரேசன்.

"ஆரோ கட்டிவிட்ட வீட்டிலை தானை நாங்கள் இப்ப இருக்கிறம் நாங்கள் வளர்த்துவிடுகிற முருங்கையை ஆரன் அனுபவிக்கட்டன்." அன்னம் யதார்த்தமாக கூறினாலும் அதில் நியாயம் இருப்பதை கதிரேசனால் மறுத்துவிட முடியாததால் "சரி வாங்கிப்பாறன் அதை நட்டு ஆடு மாடு தின்னாமல் கவனமாக வள..." என்று சொல்லியவன் அடுத்தவீட்டுக் காறரிடம் சென்று கை மொத்தத்தில் தன்னளவு உயரமுடைய ஒரு முருக்கங்கொப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கிக்கொண்டுவந்து அன்னத்திடம் கொடுத்தான்.

அன்னத்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! எங்கிருந்தோ கொஞ்சம் பசும் சாணத்தை எடுத்து வந்தாள் அதை கிளையின் உச்சிப்பகுதியில் குழைத்துப் பூசினாள். ஆழமான குழியொன்றை வெட்டி முதலில் அதற்குள் தண்ணீர் ஊற்றி ஊறவிட்டாள். சிறிது நேரத்தில் அந்த முருங்கங்கிளையை அதில் வைத்து மண்ணைப் போட்டு மூடி நன்றாக காலால் உதைத்து நட்டாள். பிறகு அதைச்சுற்றி பாத்திபோல கட்டி அது நிறைய தண்ணீரை ஊற்றிவிட்டு தனக்குள் சிரித்தபடி அதையே பார்த்துக்கொண்டு நின்றாள் அன்னம்.

ஒரு வாரத்தில் மூன்று, நான்கு இடங்களில் முளை வெடித்து துளிர்த்து வந்தது. பின்பு நாளுக்கு நாள் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க முருங்கைமரம் வளர்ந்துகொண்டிருந்தது.

இரண்டு வருடங்கள் கழிந்திருக்கும் அந்த முருங்கை மரத்தின் காய்கள் மட்டும் அன்னதிற்கு சொந்தமென்றில்லை! காலை ஆறு மணியென்றால் சில சிட்டுக்குருவிகள், அந்த முருங்கைமரத்தில் வந்தமர்ந்து கீச்சுக்கீச்சென்ற ஒலியோடு ஒன்றை யொன்று தாவிப்பிடித்து விளையாடுவது வாடிக்கையாகிவிட்டது. அந்தச் சிட்டுக் குருவிகளுக்கு பழைய சோற்றில் கொஞ்சம் போடுவாள் அதன் பின் மத்தியானத்தில் சில காக்கைகளும் வரத்தொடங்கின இப்பொழுது இவைகளும் அன்னத்தின் சொந்தங்கள்தான்.

இப்பொழுதெல்லாம் கணவனுக்கும் பிள்ளைக்கும் சமைப்பதைப்போல அரிசி கழுவும்போது பொறுக்கும் குருணல்களையெல்லாம் எடுத்து வைத்து குருவிகளுக்குப் போடுவது மட்டுமல்ல ஒரு சிரட்டையில் தண்ணீரும் வைத்து அவை அதை உண்டு மகிழும் அழகையெல்லாம் பார்த்து ரசிப்பாள்.

இப்படி அங்கு வந்து போகும் அந்த சிட்டுக்குருவிகள் காக்கைகளில் ஒரு சோடிக் காகங்கள் மத்தியானம் அன்னம் சாப்பிடும் நேரத்திற்கு சரியாக வந்துவிடும்! முதலில் அன்னம் சோத்தை வைத்துவிட்டு வந்தபின்னர்தான் அவை கீழே வந்து தின்னும். காலப்போக்கில் பழகிவிட்டதால்

---

# பொன்மொழிகள்

இறப்பைத் தவிர்க்க எந்த வழியும் கிடையாது. ஆகவே பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே உள்ள காலத்தை மகிழ்ச்சியாகக் கழியுங்கள்

ஜராஜ் சான்டாயனா

கொள்ளைக்காரர்கள் உங்கள் உயிரை அல்லது பணத்தைக் கேட்கின்றார்கள். பெண்களோ இரண்டையும் கேட்கின்றார்கள்.

சாமுவேல் பட்லர்

விதி உன் உறவினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. ஆனால் உன் நண்பர்களை நீதான் தேர்ந்தெடுக்கின்றாய்.

ஜாக்வஸ் டிலைலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அடுத்த இதழில்**
அகஸ்ட் மாத இதழின் நிழற்படத்திற்கான கட்டுரை, கவிதைகள் இடம்பெறும்.

இப்பொழுதெல்லாம் அன்னம் சோத்தைக் கொண்டு போகுமுன்னமே காகங்கள் கீழே வந்துவிடும்.

மழைக்காலங்களில் அன்னம் அடிக்கடி அந்த முருங்கை மரத்தையே பார்த்துகொள்வாள். காத்திற்கு முருங்கை மரம் முறிந்துவிடும் என்பது மட்டுமல்ல! அந்த காக்கைகளும், குருவிகளும் அந்தரித்துப்போகுமே என்ற ஏக்கமும்கூட!

ஒரு நாள் அன்னத்தின் மகள் ஒரு கயித்தை எடுத்துவந்து அந்த முருங்கை மரத்தில் ஊஞ்சல் கட்டித் தருமாறு கேட்டாள். முருங்கைமரம் முறிந்துவிடும் என்பதை மகளுக்குப் புரியவைக்க "ஏய் அதிலை ஊஞ்சல் கட்டக்கூடாது அதுக்கு வலிக்கும். அது உனது அக்காமாதிரி" என்றாள்.

"அப்பா அம்மாவுக்கு ஒன்றுமே தெரியேல்லை மரத்திற்கு வலிக்குமாம்! மரம் எனக்கு அக்காவாம்" என்று தந்தையிடம் கூறி தாயைக் கேலிசெய்தது பிள்ளை.

தன் குழந்தைக்கு மேலாக அந்த மரத்தின்மீது வைத்த பாசத்தால்த்தான் இன்று அந்த மரத்தையும் கொண்டு போகவேண்டும் என்று ஆசைப்படுகின்றாளா அன்னம்?

"வீடும் வேண்டாம் காணியும் வேண்டாம் ஆரண்டாலும் இல்லாததுகள் இருந்திட்டுப் போகட்டும்" என்று வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டு தத்துவம் பேசியவர்களெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தாயகத்திற்கு வருவதும் தங்கள் வீடு வளைவுகளை பொறுப்பேற்பதும் பரவலாக நடந்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில்தான் கதிரேசன் இருந்த வீட்டின் சொந்தக்காரர்களும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள்.

வந்தவர்கள் கதிரேசனின் நிலமையை உணர்ந்து பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் கொடுத்து வீட்டைவிட்டு போகுமாறு பண்பாகச் சொல்லிவிட்டார்கள். கதிரேசனும் தங்கள் காணிக்குள் ஒரு ஓலை வீடும் கட்டிவிட்டு அங்கு போகும் நேரத்தில்தான் இந்த முருங்கை மரப்பிரச்சனை!

"என்ன? அன்னம் இப்படியே முருங்கை மரத்தையே பாத்துக் கொண்டிருந்தா எப்படி?" என்று அன்னத்தின் தோளைத் தட்டி உசுப்பினான் கதிரேசன்.

விழிப்புக் கொண்டவளாக "என்னங்க..." என்றாள்.

"உனக்கு இந்த மரம்தானே வேணும்?--

"ஆமாங்க"

"சரி ஏற்பாடு செய்கின்றேன்" என்றான் கதிரேசன்

"எப்படிங்க" ஆவலாகக் கேட்டாள் அன்னம்.

"இந்த மரத்திலை இருந்து ஒரு கொப்பை வெட்டி எடுத்துக்கொண்டு போய் எங்கடை வீட்டிலை நட்டு வளர்ப்பம் அடுத்த வருசம் எங்கடை வீட்டிலையும் முருங்கைமரம் காய்க்கும்".

"வேண்டாங்க இதுக்குமேலை நீங்க எதுவும் சொல்லவேண்டாம். நான் வளர்த்த இந்த பச்சைக் குழந்தையை நானே வெட்டுறதா? அது வேண்டாமுங்க" என்று சொல்லி அழத்தொடங்கினாள் அன்னம்.

கதிரேசன் முற்றத்தில் நின்ற அந்த முருங்கை மரத்தைப் பார்த்தபடி மரமாக நின்றான்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரிய (க) விதைகள்

—————— அமுதகீதன்

என்
சூரியக் கவிதைகள்
சந்திரப் பிறைகளாய்
சீறும் குளிரும் காயும் - அது

மாறிடும் உலகை
மாற்றிட எண்ணிடும்
மார் தட்டி போர் நடத்தும்

யாரிடம் ஆயினும்
அஞ்சாமல் கெஞ்சாமல்
ஆற்றலை வெளிப்படுத்தும்

நேரிடும் இன்னல்கள்
நூறாயிரம் ஆயினும்
நொடியினில் பொடிப்படுத்தும்

போரிடும்உலகத்தின்
பொய் முகங்களையே
பொசுக்கிட தீ உயர்த்தும்

வேர் விடும் பொதுமையின்
வெளிச்சத்தை புவியெங்கும்
விதைத்திட பூ வளர்க்கும்

பழமையின் பாதையில்
பயணத்தை நடத்தியே
பயனையும் எடுத்துக்கொள்ளும்

புதுமையின் விடியலில்
பூபாளம் மீட்டியே
புலர்கின்ற திரையைச் சொல்லும்

அமுதாய செந்தமிழில்
அனல் மின்சாரம் செய்யும்
அற்புதம் கற்றதனால் - இச்
சமுதாய மாற்றத்திற்கே
சாற்றுவேன் என் கவியை
போற்றினேன் பொதுமை வாழி.



## நம்பிக்கை...

-------அக்கினி பாரதி

கழுதைப் படம்
மாட்டினால்
காசு குவியுமாம்!

எங்களூர்
சலவைத் தொழிலாளி
வீட்டில்
இன்னமும்
கஞ்சிக்குக்கூட
வழியில்லை

## விந்தையா! விசித்திரமா?

வண்ணை தெய்வம்

பசித்தவன் குரல்
பரிதாபமாக அனுங்குகின்றது
பங்களா நாய் குரைக்கிறது
இறைச்சி தின்னும் கொழுப்பு!

பிச்சைக்காரியின் உடம்பில்
கிழிந்த சட்டை
மேலும் கிழிக்கின்றன
கீழ்த்தரமான பார்வைகள்!

இருக்கும் முள் போதாதென்று
இன்னொரு முள்மேல் ஆசைப்பட்டு
தூண்டிலை விழுங்கி
துடி துடித்து சாகின்றது மீன்!

நோயை குணமாக்கும்
மூலிகைச் செடிகளில் பூச்சிகளாம்
மருந்தடிக்கப் படுகின்றது
மூலிகைச் செடிக்கு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருபதாம் நூற்றாண் கவிதை இலக்கியத் சுப்பிரமணிய பாரதி

(1882 - 1921)

திருமதி நவயோதி-யோகரட்

(பிரபல எழுத்தாளர் எஸ் அகஸ்தியர் அவர்களின் மகள்)

ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கம் பரவத்தொடங்கியதன் விளைவாக தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது எனக் கொள்ளலாம். குறிப்பாக கல்வித்துறை புதிய வடிவம் பெற்றதோடு சிந்தனை மாற்றத்திற்கும் வழி வகுத்தது எனலாம்.

இதில் மகாகவி பாரதியார், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் வெ.ராமலிங்கம்பிள்ளை, ஆகியோரின் கவிதைகள் கணிசமான பங்குகளை வகுத்தது என்பதனை யாரும் மறுக்கமுடியாது.

இந்த வரிசையில் புகழ்சேர்த்த சுப்பிரமணிய பாரதியார் 1882ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி எட்டயாபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் லட்சுமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். செல்லப்பெயர் சுப்பையா. 1897ம் ஆண்டு ஜூன் மாதம் பதின்நான்கரை வயதான பாரதிக்கும் ஏழு வயதுச் சிறுமியான செல்லம்மாவிற்கும் திருமணம் நடந்தேறியது.

இருபதாம் நூற்றாண்டின் மறு மலர்ச்சிக் கவிதையின் ஊற்றுக்கண்ணாக அமைந்த பாரதியார் வடமொழியிலும், ஆங்கிலத்திலும் புலமைப் பெற்றிருந்தார். 'செல்லி'மீது பற்றுக்கொண்டவராக இருந்ததோடு 'செல்லி தாசன்' என்றும் தன்னை அழைத்துக் கொண்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் பாரதியாரின் கவிதைகள் செல்லியின் கவிதைகளுடன் ஒப்பிடும் அளவிற்கு ரசனையானது.

பாரதியின் கவிதை உள்ளம் நவரசங்கள் நிறைந்திருப்பதை அவரின் பாடல்களில் காணலாம். உதாரணமாக,

"உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி" பாடலைச் சொல்லலாம்.

ஆக்கங்களின் சுவைகுன்றாமல் பூரணத் தன்மையை வலிவுடனும் பொலிவுடனும் தரக்கூடிய ஆற்றல் படைத்தவர் பாரதியார். இவர் தனது பதினைந்தாவது வயதில் வசதி படைத்த எட்டயபுரத்து மன்னருக்கு செய்யுள் வடிவத்தில் கவிதை படைத்து மிகுந்த பாராட்டைப் பெற்றார்.

தமிழ் மொழிமீது தணியாத காதல் கொண்டிருந்த பாரதியார் மக்கள் மேம்பாட்டை அடி நாதமாகக் கொண்ட





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அற்புதமான கவிதைகளை எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், மக்கள் விரும்பும் மெட்டு, இவற்றினுடையதாக தாய் மொழிக்கு புதிய உயிர் கொடுத்து தனது இதய நாதத்தை அள்ளி, அள்ளி வழங்கினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"
"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கேனும் பிறந்ததில்லை,
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

என்னும் பாடல் வரிகள் அவரின் தமிழ் பற்றிற்கு சிறந்த உதாரணமாகும்.

பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, தேசியப் பாடல்கள், சமயப்பாடல்கள், போன்றவை அவருடைய தமிழ்ப் புலமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

'இந்தியா', 'சுதேசமித்திரன்', 'சிட்கை சக்கரவர்த்தி', 'விஜயா', 'குயில்' போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்த வேளைகளில் ஆவேசமான கவிதைகள் கட்டுரைகளைத் தீட்டினார்.

பெண்களின் விடுதலை பற்றி, சுதேசியம் பற்றி, அரசியல் பற்றி, காங்கிரஸ் பற்றி, கலை பற்றி, மற்றைய நாடுகள் பற்றி, என்று பரந்த விரிவான விடயங்களையெல்லாம் அழகான தமிழில் மிகவும் சுவாரசியமாக படைத்துள்ளார்....

பெண்களின் விடுதலைக்காக இன்றைக்கு முக்கால். நூற்றாண்டுகளுக்கு முன்பே

"மாதர் தம்மை இழிவு படுத்தும்
மடமையை கொளுத்துவோம்"..

என்ற அவரின் சுலோகத்திற்கு நிகராக எதுவும் இல்லை என்றே கூறலாம்.

மஹாகவி பாரதி பாரத அன்னையை தனது இதயத்தில் வைத்து கண்ணெனப் போற்றினார் இதனை

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

என்று தனது கம்பீரக் கவி வழியாக அற்புதமாக மொழிந்திருக்கின்றார். பாரத அன்னை ஆங்கிலேயர் வசம் அடிமை நிலை பூண்டு கிடந்தமையைக் கண்டு வெகுண்டெழுந்தார்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?" என்றும்
"ஆரமுதுண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?"

என்று உன்னதமாகப் பாட்டிசைத்து மேலான சுதந்திர வாஞ்சை மிக்கவர்கள் ஒருபோதும் அற்ப சுகங்களுக்காக அதனைத் தாரை வார்க்கமாட்டார்கள் என்கின்றார்.

இவர் 1921ம் ஆண்டு தனது முப்பத்தி யொன்பதாவது வயதை நிறைவு செய்யாத நிலையில் அகால மரணத்தை தழுவிக்கொள்கின்றார்.

தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை
தமிழ்த்தொண்டன் பாரதி தான் செத்ததுண்டோ?

என்ற பாரதிதாசனின் கூற்று பாரதியின் சிறப்பை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது. எத்தனையோ இலக்கியச் செல்வங்களை விட்டுச்சென்ற பாரதியார் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் காலத்திற்கு ஏற்ற வகையில் நவீன இலக்கியங்களை உலகிற்கு தந்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

தாம் வாழ்ந்த காலத்திலேயே அடக்குமுறைகளையும், அநியாயங்களையும் எதிர்த்து உரக்கக் குரல் கொடுத்த பாரதியார் இன்றிருப்பின் நம் கண்முன்னே நடைபெறும் அநியாயங்களை எந்த மொழியில் சாடியிருப்பார் என்று கேட்கவும் தோன்றுகின்றது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனித்திடும் இல்லறம்

திருமதி விக்னா-பாக்கியநாதன்



நினைக்க நினைக்க புதுப் புது இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரும் இல்லறத்தை நீங்கள் அனுபவிக்கின்றீர்களா? என்று எம் மத்தியில் கேட்டால் மௌனம்தான் பதிலாகக் கிடைக்கும். ஆனால் நினைத்தால் வாழலாம்! மன முண்டானால் இடமுண்டே.! இவற் றை உணராமல் பல ஜோடிகள் மணவாழ்வின் மகிமையை உணராமல் மறுகிக் குறுக்கு வழியிலே இன்று தம் வாழ்வைத் தொலைத்து நிற்பதையே காணக்கூடியதாக உள்ளது.

விட்டுக்கொடுப்பு, புரிந் துணர்வு, கருத்தொருமிப்பு, நம் பிக்கை, அன்பு, என்ற ஐந்து அம்சங்களும் மணவாழ்வில் இறுக் கமாக இருந்தால் இல்லறம்



வெல்லமாகும். ஆயிரங்காலத்துப் பயிர் எனப்படும் திருமணப் பந்தம் இடையில் கருகாமல் தழைக்கும். வெளியுலகிற்கு சிலர் தம்பதிகளாகத் தோற்றமளிப்பவர்கள் பலரிடத்தில் இன்று உள்ளப்பிணைப்பில் ஒருமைப் பாடு இல்லை! இவ்வாறு ஏற்படக் காரணம் என்ன? எனச் சிந்திப்பது இன்றைய காலத்தேவை ஆகின்றது.

இன்றைய நவநாகரீக உல கம், இணையத்தளயுகம், கணினிக் காலம் என்ற சூழ்நிலையிலே அந்த வாழ்க்கைமுறை இதனால் நமது வாழ்க்கை முறை அதி வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. அதாவது எதையும் பின்னோக்கிப் பார்க்காமல் முன்னோக்கிய வண் ணம் மலையிலிருந்து ஓடிவரும் கடிவாளம் இல்லாத வண்டியைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போல இன்றைய மணவாழ்வு பலருக்கு அமைந்து விடுகின்றது. இதன் காரணமாக இடையில் மோதல் நொருங்கல். உடைதல் என்ற அத்தியாயங்கள் ஆரம்பிக்கின்றன. இது காலகதியில் மண முறிவு என்ற அத்தியாயத்தில் வந்து நிற்கின்றது. காலம். காலமாக பேணப்பட்டு வந்த இல்லற தர்மம் 'நோற்பாரின் நோன்மை உடைத்து' என்ற வள்ளுவரின் இல்லறக் கருத்து அற்பகாலப் பயிராகப் பொசுங்கி விடுகின்றது. பொருத்தமற்ற இணைப்பு. பொருளாதார அபிவிருத்தி, அறிவியல் வளர்ச்சி ஒருவரை ஒருவர் பூரணமாக புரிந்துகொள்ளாமை. சகிப்புத்தன்மை இன்மை. மணவாழ்வின் விளக்க மின்மை, போன்ற பல காரணங்கள் இந்நிலமையை தோற்றுவிப்பது வேதனைக்குரிய விடயமே!. அவசர உலகிற்கேற்ப அக வாழ்க்கையும் அமைவதாலேயே இந்தப் பிரிவினையும், திண்டாட்டமும் ஏற்படுகின்றன் எனப் பொதுவாகக் கூறலாம்.

இன்றைய இல்லத்துணைகளில் கருத்தொருமிப்பும் புரிந்துணர்வும் இல்லாமையினால் வாழ்க்கைப் படகு தள்ளாடுகின்றது. பொருளாதாரச் செழிப்பும் இருவரின் சம்பாதிப்பும் இதற்குக் காரணம் எனப் பலர் தெரிவிக்கின்றனர். இன்னும் துணைகளுக்குள் சமவுரிமை நிலைநாட்ட முயல்வதும் யார் பெரியவர் என்ற ஆதிக்கவாதம் (ஈகோ) தலையெடுப்பதாலும் இத்தகைய் இடர்பாடுகள் ஏற்படுகின்றன எனக் கூறுவோரும் உள்ளனர். எவ்வளவு தான் எடுத்துரைத்தாலும் இவைகளுக்கிடையே உண்மையான பரஸ்பர பாசம். நம்பிக்கை புரிந்துணர்வு உரிமை கடமை என்பன இருக்கும்போது எந்த தீய சக்தியும் தம்பதிகளிடையே ஊடுரவமுடியாது. அங்கு ஊடுருவிப் புகுவதற்கு இடமுமில்லை.

இன்றைய சூழ்நிலையில் ஆணும் பெண்ணும் சரிசமனாக தொழில் புரிவதனால் ஒவ்வொருவருக்கும் பலருடைய நட்புகள் கிடைப்பதும் தவிர்க்க முடியாதது. இதை சரியாகப் புரியாத சிலரது இல்லத்தில்தான் சந்தேகப்பேய் சந்தோஷமாக நுழைந்து விடுகின்றது. எனவே சந்தேகம் என்ற மூன்றாம் பேர்வழியை இல்லறத்திற்குள் நுழைய விடாதீர்கள். இல்லற ஜோடிகளே! உங்களுக்குள்ளே உரமாக ஊன்றியிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான் இல்லற உறவின் உடையாத பாலம் என்பதனை மறந்துவிடாதீர்கள்.

சந்தேகம் குடும்பவாழ்வை அரித்துத் தின்னும் புழு. இதனால் அழிந்த இல்லற பந்தகள் எண்ணற்றவை! ஆரோக்கியமாகச் சிந்தித்து செயல்படுவதே வாழ்க்கையின் வெற்றியாகும்.

புலம்பெயர் வாழ்வினிலே எமது இல்லறம் தனது தனிப்பண்பை இழந்து தலைகீழாவதைக் கண்டு வேதனைப்படுவதைவிட வேறு என்ன செய்யமுடியும்? வெளிநாட்டவர்களைப் பொறுத்தவரையில் திருமண வெள்ளி விழா கொண்டாடுவதே உலக அதிசயங்களில் ஒன்றானதாக இருக்கின்றது! சிறு சிறு காரணங்களைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தீவிரவாதம்**

●

தீவிரமாய்ச் சிந்திப்போம்
வாதம் செய்வோம்
தீவிரவாதத்தை
வதம் செய்வோம்.

**முதுமை**

●

இளமைக்கு
முடிவுரை
தந்துவிட்டு
முன்னுரையாய்
அறிமுகமாகும்
படலம்
இதன் முடிவுரையிலோ
அனைவரும்
சடலம்

**இடி**

●

மழைக்குப் பயந்து
மரத்தடியை நாடினேன்
ஐயோ! இடி!

- நந்தினி

சாட்டாக வைத்து எடுத்தவுடன் மண முறிவிற்கு மனுப்போட்டு விடுகின்றனர். இதுவா எமது இல்லறம்?

பிரச்சனைகள் இல்லாத குடும்பங்கள் இல்லை, கருத்து வேறுபாடுகள் தலைகாட்டாத குடும்பங்கள் இல்லை, ஊடல் இல்லாத குடும்பங்கள் இல்லை, ஆனால் இவை வந்த வேகத்திலேயே திரும்பிப் போய்விட்டால் எல்லோருடைய இல்லங்களிலும் இனிக்கும் இல்லறம்தான்.

ஒருவர் எந்தப் பிரச்சினையையும் சகித்து சமாளித்து வாழ முடியும். ஆனால் குடும்பத்திற்குள் பிரச்சனையை வைத்துக்கொண்டு எந்த ஒரு பலவானாலும் ஆரோக்கியமான எந்த செயலையும் திறம்பட செய்ய முடியாது. இல்லறப் பிணக்குகளை நாமே நமக்குள் தீர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர மூன்றாம் நபர் மூக்கை நுழைக்க விடக்கூடாது. இல்லற வாழ்க்கையில் இரு மனங்களின் முடிவுகள் இன்றியமையாதது. வெளிப்புறத் திணிப்புகள், பயமுறுத்தல்கள், செல்வாக்குகள், பொருளாதார உதவிகள், எவையும் கசந்த மணவாழ்வை இனிப்பாக மாற்ற முடியாது. அப்படி மாற்றினாலும் அது தற்காலிகமானதாகவே இருக்க முடியும்.

எனவே இல்லறத்துணைகளே! உங்கள் இன்பம் உங்கள் மனங்களில்தான் இருக்கின்றது. இனித்திடும் இல் வாழ்விற்கு வயது வேறுபாடு எதுவும் கிடையாது எவ்வளவுதான் வயதானாலும் சுடச் சுடக் காச்சும் பாலின் மணம்போல இனிமை பரவிக் கொண்டே இருக்கும். நடைதளர்ந்த நிலையில்கூட ஒருவருக்கு ஒருவர் ஊன்றுகோல்களாய் மாறி இல்லறத்தில் இனிதாக வாழ முடியும்.

எனவே ஆத்மார்த்த ரீதியில் இரு மனங்களும் தமக்குள் இணைந்து தமது உணர்வுகளை தமக்குள் பரிமாறிக்கொண்டு வாழும் போது அங்கே இல்லறத்தின் வெற்றியும், வாழ்வின் முழுமையும் கிடைக்கின்றன இந்த நிலை எல்லோருக்கும் கிடைத்தால் எல்லோரும் பாய்க்கிய வான்களே.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களுக்கு மூக்கிற்கு மேல் கோபம் எப்போது வரும்?

பெண்களே! இந்த தகவல்களைப் படிக்கின்றபோது இது உங்களுக்கும் சம்பந்தம் உள்ள விஷயமாகத் தோன்றுகின்றதா பாருங்கள்! உங்களுக்கு இதெல்லாம் பிடிக்காதுதானே!

●கோவிலில், சந்தையில், வீதியில், நீங்கள் நடந்து செல்லும்போது வழியை மறித்துக்கொண்டு வெட்டிப்பேச்சு பேசிக்கொண்டு நிற்பவர்களைப் பாக்கும்போது.

●அடுத்த வீட்டுக் குழந்தைகள் உங்கள் வீட்டிற்கு வந்து பொல்லாத குறும்புகள் செய்து உங்கள் வீட்டுக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களை உடைக்கும்போது.

●நாங்கள் விருப்பப்படுகின்றோம் என்பதை அறிந்து வியாபாரிகள் விலையை கூடுதலாகச் சொல்லும்போது.

●நம்மைக் காணும்போது சிரிக்க சிரிக்கப் பேசிவிட்டு அடுத்தவர்களிடம் நம்மைப்பற்றி கோள் மூட்டி வைப்பவர்களைக் காணும்போது.

●நாம் குற்றம் செய்யாத போதும் நம்மீது குற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமத்தப்படும்போது.

●என்ன இப்படி குண்டாகிவிட்டீர்களே! என்று இன்னொருவர் சொல்லும்போது.

●வீதிகளில் குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் போடுபவர்களையும், சுத்தமில்லாதவர்கள் அருகில் நெருங்கி வந்து நிற்கும்போதும்.

●பொது இடங்களில் சத்தமாகப் பேசுபவர்களையும். ஒலியைக் கூடுதலாக வைத்து பாடல்களைக் கேட்பவர்களைக் காணும்போதும்.

●சரியான நேரத்திற்கு பேரூந்து, புகையிரதம், வராதபோது.

●நகைச்சுவை என்ற போர்வையில் இரட்டை அர்த்தத்தில் பேசும் ஆண்களைப் பார்க்கும்போது.

●வீட்டில் உள்ள பெரியவர்கள், குழந்தைகளை கெட்ட வார்த்தைகளால் திட்டும்போது.

●விருந்தாளிகள் வந்திருக்கும்போது மிகுந்த சிரமப்பட்டு சமைத்த உணவு சுவையில்லாமல் வரும்போது.

●உங்கள் தங்கையுடனோ! அல்லது அடுத்தவீட்டுப் பெண்களுடனோ! உங்கள் கணவர் சிரித்துச் சிரித்துப் பேசும்போது.

●நகை. புடவை, வாங்கித் தருவதில் கணவர் கஞ்சத்தனம் காட்டும்போது

என்ன? எல்லாவிடயமும் கோபம் வருகின்ற விடயம்தான் என்று சொல்கின்றீர்களா? பரவாயில்லை இதில் ஆக கூடுதலாக உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தும் ஒரு விடயத்தை எடுத்து அதற்கான காரணத்தை எங்களுக்கு எழுதுங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கின்றோம். விரும்பினால் உங்கள் புகைப்படத்தையும் அனுப்பலாம். கண்டிப்பாக பிரசுரிப்போம்.

---

முகவரி:
TamilNenjam
59, rue des Entrechats, 95800 Cergy - France
e-mail: editor@tamilnenjam.com

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்யாணவீடு எப்போது வினோத நிகழ்ச்சியானது..?

## த. சரீஸ்

அவசரமாய் ஓடும் வாழ்க்கையில்
ஒரு அவசரக்கல்யாணம்...!

எல்லாமே
அவசரங்களாய்...!
தாலி கட்டப்போகும்
மாப்பிள்ளையில் இருந்து
மந்திரம் சொல்லும்
அய்யர்வரை எல்லோருமே...!

தாலி கழுத்தில் ஏறு முன்னம்
தாயின் கண்ணீருடன் வாழ்த்துக்கள்
தொலைவினில் இருந்தபடி
தொலைபேசியில்...!

அய்யர் மந்திரம் சொல்லி
முடிச்சாச்சு
மாப்பிள்ளை
தாலி கட்டியாச்சு
சாப்பிட
எல்லோரையும் அழைத்தாச்சு



கலியாணவீட்டுக்கு வந்தவர்கள்
கூட்டம் கூட்டமாய் கூடியாச்சு
இனி
அடுத்த நிகழ்ச்சி
வினோத நிகழ்ச்சி

உதைபந்தாட்டப் போட்டி பற்றி
உரையாடியபடி ஒரு கூட்டம்
ஈராக் அமெரிக்கா பிரச்சனை பற்றி
ஆய்வு செய்தபடி ஒரு கூட்டம்
தொலைக்காட்சி தொடர் நாடகம்
பற்றி
பேசிக்கொண்டு ஒரு கூட்டம்
பெண்களின் கண்களை
பார்த்துக்கொண்டு ஒரு கூட்டம்
தன் பிள்ளைதான் கெட்டிக்காரன்-என
பேசிக்கொண்டு ஒரு கூட்டம்

மாலை நேரம் ஆனது
கூட்டம் ஒவ்வொன்றாய்
கலைந்தது
கல்யாணம் முடிந்தது.

நண்பனின் கல்யாணவீடு
அந்தமாதிரி நடந்தது...?
யாரோ சொல்லிக்கொண்டு போவது
என் காதில் கேட்டது..

கல்யாணவீடு
எப்போது வினோத
நிகழ்சியானது...?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அமரர் கே.டானியல் பற்றி பேராசிரியர் க.சிவத்தம்பி அவர்கள்.

டானியலின் பஞ்சமர் நாவலைக் கூட "அது ஒரு வர்க்கரீதியான அடிப்படையில் எழுதப்படவில்லை. சாதியின் அடிப்படையில் எழுதப்பட்டது" என்று ஆரம்பகட்டத்தில் மார்க்சியவாதிகள் புறக்கணித்துவிட்டனர் என்று ஒரு விமர்சனம் இருக்கின்றதே. அது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

மார்க்சியவாதிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவது சரியானது ஆகாது. டானியலைப் பற்றி ஆராய்கின்றபோது, இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. அவர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் ஒரு எழுத்தாளராக பரிணமித்த காலம். அந்தக் காலத்தில் அவருடைய சிறுகதைத் தொகுதிகள் வந்தபோது எந்த வேறுபாடும் நாங்கள் காட்டவில்லை. அடுத்தமுறை அவர் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தார். அப்போதும் பஞ்சமர் சம்பந்தமாகவோ, மற்ற நாவல்கள் சம்பந்தமாகவோ அவருடைய எழுத்துக்குள்ள முக்கியத்துவத்தை நாங்கள் குறை கூறவில்லை. அப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் இன்னொரு வேறுபாடும் இருந்தது. சீன சார்பு, மாஸ்கோ சார்பு. உதாரணமாக நான் மாஸ்கோ சார்பு. டானியல் சீன சார்பு. இருந்தும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பஞ்சமர் பற்றி பேசும்போது நாங்கள் அதை சிலாகித்துத்தான் பேசினோம்.

சுபமங்களாவில் கூறிய ஒரு செவ்வியில் இருந்து

# முதல் குற்றம்

கல்லாகிப் போனவளே!
கண்ணகியே நீ பெற்ற
பொல்லாத மகனொருவன்
புலம்புவதைக் கேளிங்கே
கட்டில் சுகம்காண - உன்
கணவனவன் செல்லும்போதே
தட்டிக் கேட்டிருந்தால்
தவறியிருப்பானா? - நீ
பெட்டிப் பாம்பாக
பேசாதிருந்ததுதான்
கட்டழகி நீ செய்த
கடும் குற்றம்! - உன்
முதல் குற்றம்.



1971ம் ஆண்டு பி.ஏ. முதலாண்டு படித்துக்கொண்டிருந்தபோது பச்சையப்பன் கல்லூரி ஆண்டு மலரில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாவம் அவர்கள்!

தாமரா - சுப்பிரமணியம்

வடிகால் அமைப்பதற்காய் வழங்கிடுங்கள் சிறு உதவி
மடி இரந்து கேட்டதற்காய் மனமிரங்கிப் பணம் கொடுக்க
வெடி வாங்கப் போனவர்கள் தம்மடி நிரப்பி வாங்கி வந்து
முடிகாக்க அம்மணிக்கு முத்தாக உதவிசெய்தார்

வந்தவைகள் இருந்தவைகள் வாடகைக்கு எடுத்தவைகள்
மந்தையிலே புலியொன்று மறித்துச் சுருட்டியது போல்
அத்தனையும் பறிகொடுத்து ஆருமற்று நிற்கையிலும்
அம்மணியின் ஆணவமோ அணுவளவும் குறையவில்லை.

கெட்ட குடி கெடுமென்று கேள்வியுற்றேன் உண்மையது
பட்டினியால் நாள் உழலும் பாமரனின் இல்லமெங்கும்
கொட்டுகின்ற குண்டுகளின் கோர நிகழ்வுகளை
எட்டி நின்று பார்ப்பவர்கள் எப்போ நீதி சொல்வர்?

தேற்றுவதற்கு யாருமில்லை தத்தெடுக்க நாடுமில்லை
மாற்றுவழி ஏதுமில்லை மடியினிலே பணமும் இல்லை
நேற்றுவரை நாங்களெல்லாம் கொண்டிருந்த நம்பிக்கை
பார்த்திருக்கக் கரைகிறது பாவிமக்கள் ஏங்குகிறார்
பாவம் அவர்கள்! பாவம் அவர்கள்!!

வீதி திறப்பு விழாவுக்கு
போட்ட பந்தல் சரியா குலையவில்லை
வீதி எல்லாம் குண்டும் குழியும்...!

தமிழ் பாடசாலைச் செல்ல அம்மா தடுக்கிறா
ஏன் என்று கேட்டால்...
தமிழ் படித்து வேலை கிடைக்காதாம்!

அம்மாவுக்கு மகன் அழைப்பு
கணவனுக்கு வரும்படி...
மனைவி பெறு மாதம்!

அக்காவின் காதல் கடிதத்தை அன்று
அத்தானிடம் கொடுத்ததாய் ஞாபகம்
அக்காக்கள் இன்று அருகில் இருக்கவே தயக்கம்!

வேலணையூர் பொன்னண்ணா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நெஞ்ச நெருடல்

நூலாசிரியர்:

இணுவை சக்திதாஷன்

தொடர்புகட்கு:
K.Sakthithasan,
Ildtorn 19 lth,
3300 Frederiskuark,
DENMARK

ஐரோப்பாவில் இருபத்தி நான்கு மணிநேர வானொலிகளின் வரவிற்குப்பின்னர் பல படைப்பாளிகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளார்கள்.

அவர்களில் ஒருவர்தான் டென்மார்க்கில் வாழ்ந்துவரும் இணுவை சக்திதாஷன். ஐரோப்பிய வானொலிகளில் பாடிய தனது கவிதைகளில் ஐம்பது கவிதைகளைத் தொகுத்து 'நெஞ்ச நெருடல்' என்னும் பெரில் புத்தகமாக்கி இருக்கின்றார்.

இந்நூலில் பதிந்துள்ள பல கவிதைகள் A.B.C தமிழ்ஒலி வானொலியில் கவிஞர் வண்ணை தெய்வத்தின் தொகுப்பில் இடம்பெறும் கவிஞர்கள் சங்கமத்தில். இந்நூலாசிரியர் சக்திதாஷன் தனது குரலில் பாடிய கவிதைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலினை யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள கஜன் பிறிண்டேஸ் பதிப்பித்துள்ளார்கள். இணுவில் பொது நூலக இலக்கிய வட்டம் வெளியிட்டிருக்கின்றது.

# புத்தகம் புதிது

வானொலிகள் ஊடாக தான் பிரவிசித்த கவிதைகளை இந்நூலாசிரியர் தொகுத்து நூலாக்கியிருக்கின்றார். A.B.C.-I.B.C. வானொலிகளில் அடிக்கடி இவரின் குரலில் ஒலித்த கவிதைகளில் இருபத்தி எட்டு கவிதைகளைத் தேர்ந்தெடுத்து 'விழி' என்னும் தலைப்பில் நூலாகத் தொகுத்திருக்கின்றார். அட்டைப்படத்தை கே.கே.அருந்தவராஜா அவர்கள் மிக அழகாக அர்த்தத்துடன் கணினியில் உருவாக்கியிருக்கின்றார். ஜேர்மனியில் உள்ள ராஜி பதிப்பகத்தினர் அச்சிட்டிருக்கும் இந்த விழி நூலினைப் படிக்கும்போது செல்வி வாசுகி குணராஜாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்பது தெளிவாகிறது.




## விழி

நூலாசிரியர்:
செல்வி வாசுகி குணராஜா
தொடர்புகட்கு:
ராஜி பதிப்பகம்
Rombo Prasath
10 59 439 holfatwikide
German



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரிக்கவிதைகள் என்னும் இந்தக் கவிதைத் தொகுப்பு கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களுக்கு இன்னுமொரு மகுடம் சூட்டியிருக்கின்றது. நூலாசிரியரின் எழுத்துத் திறமைக்காக அண்மையில் அமெரிக்காவிலுள்ள பல்கலைக் கழகம் ஒன்று டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கின்றது. இவரின் கவிதைகளைப்பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு இது ஒன்றே போதும். கனடாவில் உள்ள விவேக் அச்சகம் பதிப்பிக்க கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் இந்நூலை வெளியிட்டிருக்கின்றார்கள். கவிநாயகர் கலா நிதி வி. கந்தவனம் அவர்கள் இன்னும் பலகாலம் வாழ்ந்து இலக்கியத்திற்கு சேவை செய்ய எமது வாழ்த்துக்கள்.




## வரிக்கவிதைகள்

நூலாசிரியர்:
கவிஞர் வி.கந்தவனம்

தொடர்புகட்கு:-
Mr. V.Kandavanam,
204 - 47 Thorncliffe Park Drive,
Toronto - Ontario
M 4 H 1J5 Canada

# புத்தகம் புதிது




## அமுதுவின் கவிதைகள்

நூலாசிரியர்:
புலவர்மணி இளவாலை அமுது

பக்க அளவு: 15x21 cm

வெளியீடு:
S.Adaikalaamuthu
87, Hazelmere Walk, Northolt
Middesex UB5-6UR, London. UK

நூலாசிரியர் அமுதுவிற்கு அறிமுகம் தேவை இல்லை. "நெஞ்சே நினை", "இவ்வழி சென்ற இனிய மனிதன்", "காக்கும் கரங்கள்" (வைத்தியம்), "அன்பின் கங்கை அன்னை தெரசா", "மடுமாதா காவியம்" ஆகிய நூல்களை எழுதியுள்ள இவருக்கு புனிதப் பாப்பரசர் அவர்களால் மடுமாதா நூலுக்காக பாவேந்தன் எனும் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டார். இது தவிர - மதுரகவி, புலவர்மணி இன்னும் பல பட்டங்களை பெற்றுள்ளார். இக்கவிதை நூல் இன்னுமொரு மகுடமாகும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மண்ணோடு விளையாடிய விண்ணுலகம்

முகத்தார் எஸ்.ஜேசுறட்ணம்

நீண்ட இடைவெளிக்குப்பின். உடல் நலம் குன்றிய எனது சமகால கலையுலக நண்பரைக் சந்திக்கச் சென்றேன். பாரீஸில் அமைந்திருக்கும் புதுப் பொலிவுடனான பழைய மாடிக்கட்டிடம். குளியளரை அளவேயுள்ள ஓதுக்குப்புற அரையில் கூனிக்குறுகியபடி அனுங்கிய வண்ணம் தனியாகப் படுத்திருந்தார் நண்பர். எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

"மச்சான் சிவத்தான்! என்னடா உன்ரை கோலம்?" என்ற என் குரல் கேட்டு அஞ்குமிங்குமாய் அங்கலாய்த்து.

"எங்கேயோ கேட்ட குரலாக் கிடக்குது. முகத்தான்ரை குரல் போலையும் கிடக்குது. ம்...! மச்சான் முகத்தான்! நீயேடா? நீபாவது என்னைத் தேடி வந்திட்டாய்!" அங்குமிங்குமாக துடவி, என் கைகளைப் பிடித்து. கட்டிலில் அமர்த்திவிட்டான் சிவத்தான்.

"நான் கதைக்கிறன். நீ... சுவருக்கு மறுமொழி சொல்லுறாய். என்ன சங்கதியடா?" என்றேன்.

"பிரான்சுக்கு வந்து எட்டு வருஷம் ஆகயில்லை. இருபது தரம் ஆசுபத்திரிச்சீவியம். உள்ளங்காலிலிருந்து. கண்ட மட்டும் வெட்டாத இடமில்லை. உலகத்தில உள்ள அத்தனை வருத்தங்களும் தொத்த இடமில்லாமல் என்னிலைதான் தொத்தியிருக்கு. கண்பார்வை அடியோடு மங்கிப் போச்சுது. தார்றதைச் சாப்பிட்டுட்டு. சுருண்டு படுக்கறதுதான் வேலை. இப்ப நான் 'ஆந்தை வாழ்க்கை' வாழ்ந்துகிட்டிருக்கேன் மச்சான்" என்றான்.

"ஆந்தை வாழ்க்கையா?" எனக்கு விளங்கவில்லை. வானொலி. மேடை. திரைப்படமென கொடிகட்டிப் பறந்த நாட்களில் நாங்கள் இருவரும் ஆடிய ஆட்டங்களை அந் நாள் ஞாபகங்களை இரைமீட்டுப் பார்க்கிறேன்.

"ஏன் மச்சான் சிவத்தான். உன்ரை மனுஷிக்காரி. இஞ்சை உன்னோடை வந்திருக்கலாமே?" என்றேன் நான்.

"என்ரை மனுஷியோ? அவளுக்கு இன்னம் 'ஆந்தை வாழ்க்கை' துவங்கவில்லையடா முகத்தான். அவ இப்ப 'வெளவால் வாழ்க்கை' வாழ்ந்துக் கொண்டிருக்கிறாள் பாவி. ஒவ்வொரு பிள்ளையள் வீடா பறந்து திரியறா. இடைசுகம். இஞ்சையும் வந்து போவா. மாசம் முடிய பிச்சைப் பென்சன் எடுக்க இஞ்சை வருவா" என்றான்.

"உனக்கு ஆந்தை வாழ்க்கை என்கிறாய்? மனுஷிக்காறிக்கு. வெளவால் வாழ்க்கை என்கிறாய் எனக்கு ஒரு சாம்பலும் விளங்கவில்லையடா சிவத்தான்! என்ன தலையிலும் தட்டிகிட்டுப் போட்டுதோ?" என்றேன்.

சிவத்தான் சிரித்தபடி "இது ஒரு தத்துவமடா முகத்தான். பிரம்மன் படைப்புக்கு அதிபதி. விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்தார் படைத்தார். மானிட ஜடத்திலிருந்து எல்லா ஜீவராசிகளையும் - விலங்கினம். பறவையினம். ஊர்வன. நகர்வன உட்பட எல்லாவற்றினையும் நாற்பது வயது-வரைதான் உங்கள் அனைவரினதும் கால எல்லையென வரையறுத்துவிட்டு, எல்லா ஜீவராசிகளிடமிருந்தும் விடைபெற்றுச் சென்றுவிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூமியில் பெரிய குழப்பம். நாற்பது போதாதென்றும், நாற்பது கூடிவிட்டதென்றும் போராட்டத்திலே குதிக்கத் தொடங்கிவிட்டன ஜீவன்கள். போராட்டம் முத்திவிட்டதென உணர்ந்த பிரம்மதேவன், மீண்டும் விண்ணிலிருந்து மண்ணுக்கு விரைந்தார். வட்டமேசைக் கூடியது. எல்லா ஜீவராசிகளும் வந்திருந்தன. சட்டென மானிடன் எழுந்து, 'தேவரீர்! எனக்கும் நாற்பது இந்த நாய்க்கும் நாற்பதா? அப்படியென்றால், எனக்கும் நாய்க்கும் என்ன வித்தியாசம். நான் படித்து, வேலைப் பார்த்து, கலியாணம் கட்டி, பிள்ளைக் குட்டியளோடை நாற்பது வயதிலதான் எனது வாழ்க்கையே ஆரம்பிக்குது. தங்கள் கால எல்லை சட்ட விரோதம்! அக்கிரமம்!! அநீதி!!! எனது வயதெல்லை உடனடியாக நீடிக்கப்பட வேண்டும்.' என்று கூறி முடிப்பதற்குள், எழுந்தார் நாய்ப்பிள்ளை. 'தேவரீர்! எனக்கு நாற்பது கூடிப் போச்சுது. இந்த மானிடன், தான் திண்ட மிச்சத்தைத்தான் எனக்குச் சாப்பிடத் தருகிறான். இறைச்சியையும், மீனையும் சாப்பிட்டுவிட்டு, அதன் எலும்பையும், மரக்கறிச் சட்டியையும் வழிச்சுத்தான் எனக்குத்தாறான் பாவி. அவன் இரவு முழுக்க நித்திரை. நான்தான் நித்திரை முழிச்சு வீட்டைக் காவல் காக்க வேணும். கள்ளன் காடன் வந்தால் குலைக்க வேணும். இந்த நாய் ஜீவியம் போதுமெனப் போதும் இருபது போதும். மிச்சம் இருபதையும் யாருக்கும் தரலாம்' என்று ஊளையிட்டு முடிவுமுன் சட்டென எழுந்த மானிடன் 'இந்த நாயின்ரை இருபதையும் எனக்குத் தந்துவிடும்' எனக் கேட்க பிரமனும் ஏற்றார்.

மெதுவாக எழுந்தார் வௌவாலார் 'தேவரீர் நான் விலங்கினமா? பறவையா? ஆல் பழுத்தால் அங்கே. அரசு பழுத்தால் இங்கே பறந்து திரியறேன். குட்டிப் போட்டுப் பால் கொடுக்கறேன். எல்லா ஜீவராசிகளும் நீட்டி நிமிர்ந்து நித்திரைக் கொள்ளுதுகள். நான் மட்டும், தலை கீழாகத் தொங்கிக் கொண்டுதான் நித்திரை கொள்ள வேணும். இந்த வாழ்க்கை எனக்கு போதுமெனப் போதும். இருபது போதும்' என்றது. தேவரீர் என்று எழுந்தான் மானிடப் பரதேசி வௌவாலுடைய மிச்ச இருபதையும் தனக்கு தந்துவிடும்படி காலில் விழுந்து கெஞ்சினான். 'தந்தோம்' என பிரம்மா கூறி முடிப்பதற்குள் ஆந்தையார் எழுந்தார்.

'சகல ஜீவனுக்கும் பகலில் கண் தெரியுது. எனக்கு மட்டும் ஏன் இரவில் கண் தெரிய வேணும்? இரவில் நான் இரை தேடி திரிவன். தட்டு தடுமாறி விடிஞ்சுட்டுதென்றால் வேலியோட, வீடோ, மரமோ இருந்த இடத்திலேயே இருந்து விடுவேன். காகம் கண்டால் டக்கென்று பறந்துவந்து என்ரை தலையிலே ஒரு டொக், கரிச்சான் கண்டால் ஒரு டொக் இப்படி டொக் வாங்கியே கஷ்டப்பட்டது போதும். அதால எனக்கும் இருபது போதும்' என்று அலறி முடிப்பதற்குள் மானிடன் அதையும் தனக்குத் தந்து விடும்படி வேண்டி நின்றான்.

'பேராசைப்பிடித்த மானிடனே உனக்கே தந்து விடுகிறேன். உனது ஆயுள் இப்போது நூறாக நீடிக்கப் பட்டிருக்கிறது. இதன் பலாபலனை நீயே அனுபவித்துக்கொள். அப்போது நீ தானே உணர்வாய்' என்றாராம்.

என்னை அறியாமல் வாய்விட்டு சிரித்துவிட்டேன்.

"மச்சான் முகத்தான். நல்லா யோசிச்சுப்பார்! மனித வாழ்கையின் தத்துவம்" என்றான் சிவத்தான்.

உண்மைதான். நாற்பது வரை நல்வாழ்க்கை! நாற்பதிருந்து அறுபது-வரை நாய் அலைச்சல்!! அறுபதிலிருந்து என்பதுவரை நிலையற்ற வாழ்க்கை!!! அதற்குப்பிறகு ஆந்தை... சிந்தித்தேன். ❍



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்"

# தமிழ்நெஞ்சம்

பல்சுவை இதழ்

www.tamilnenjam.com

நிறுவிய ஆசிரியர்
அமின் மொஹமெட்
Amine Mohamed

பதிப்பாளர் - ஆசிரியர்
தா. ஹிப்சுர் ரஹ்மான்
T. Hifsur Rahman

பொறுப்பாசிரியர்
ச.'.பி மொஹமெட்
Shafi Mohamed

ஆசிரியர் குழு
இராசநாயகம் ஜேசுதாசன்
Rasanayagam Jesudasan
புதுநகர் செல்லத்துரை
Puthunagar Selladurai
கவிஞர் இமயபாரதி
Poet Imayabarathi

நிர்வாகம் - வடிவமைப்பு
சப்ரினா மொஹமெட்
Sabrina Mohamed

வெளியீடு
தமிழர் கலை கலாச்சார மாமன்றம்
Fédération des Arts et Culture des Tamouls

தொடர்புகளுக்கு...
TamilNenjam
59 rue des Entrechats
95800 Cergy - France

e-mail : editor@tamilnenjam.com

இவ்விதழைத் தொகுத்தளிப்பவர்:
**வண்ணை தெய்வம்**

அக்டோபர் மாத இலக்கியச்
சிறப்பிதழை தொகுத்தளிப்பவர்::
**கவிஞர் கி.பாரதிதாசன்**

நவம்பர் மாத இதழ் தொகுப்பாளர்:

?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வண்ண வரிகள்

# நான் கழுதையானேன்!

வருடம் ஒன்றை நெருங்கப்போகின்றது!

"வண்ணை" இதழை நான் தற்காலிகமாக நிறுத்தி வருடம் ஒன்றாகப் போகின்றது!

இந்த ஒரு வருட இடைவெளியில் எனது எண்ணங்களை வெளிப்படுத்த முடியாமல் அவைகளை எனது மனதுக்குள்ளேயே நான் சுமந்துகொண்டிருந்தேன். வாழ்நாள் பூராவும் பொதிகளையே சுமந்துகொண்டிருக்கும் கழுதையைப்போல ... நானும் எனது எண்ணங்களை மனதுக்குள்ளேயே சுமந்துகொண்டிருந்தேன்!

நான் சுமந்துகொண்டிருக்கும் சுமை தெரிந்து... எனது நிலை அறிந்து .. இந்த இதழை தயாரிக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்தவர் நண்பர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள்.

மகிழ்வோடு எனது எண்ணச்சுமைகளை இறக்க வந்த எனக்கு வெளிவந்திருந்த இதழ்களின் தரத்திற்கு எந்த விதத்திலும் இந்த இதழ் குறைவாக இருந்துவிடக்கூடாது என்ற நிதானமும். பல்சுவை இதழ் என்ற கொள்கையில் இருந்து தமிழ்நெஞ்சம் விலகிவிடக்கூடாது என்னும் பயமும் எனது மனதில் மறுபடியும் ஒரு சுமையாக ஏற்பட்டபோது நான் மீண்டும் கழுதையானேன்!

சுமந்த சுமைகளை இறக்க மீண்டும் புதியசுமைகள் கழுதையின்மீது ஏற்றப் படுவது போன்ற நிலையில்தான் இங்கு நானும்!

இருந்தாலும் இந்த சுமையெல்லாம் பத்திரிகையாளனுக்கு ஒரு சுகமான சுமை! சந்தோஷமாக சுமப்பேன்.

இப்பொழுது எனது சுமைகளை இந்த இதழ் மூலமாக உங்களிடம் சுமத்திவிட்டேன். உங்களிடமிருந்து பதிலை எதிர் பார்க்கிறேன்.

அன்புடன்
வண்ணை தெய்வம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைதி கிடைக்கவேண்டுமா
அமர்ந்து தியானம் செய்
என்கின்றனர்

உன்னையே
தியானம் செய்கிறேன்
கிடைக்குமா அமைதி

மதுமிதா

# தமிழ்நெஞ்சம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்